நிர்வாகம்

கூடுதல் ஆணையர் (நிர்வாகம்), முதன்மை செயலர்/
வணிகவரி ஆணையர், வணிகவரி ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம்,
சென்னை-5 அவர்களின் செயல்முறைகள்

இணை ஆணையர் (மாநிலவரி) அலுவலகம், சென்னை-6, 23 APR 2021, 3085, சென்னை (தெற்கு) கோட்டம்

முன்னிலை: க. லஷ்மி ப்ரியா, இ.ஆ.ப.

செயல்முறை ஆணை எண். ஒய்-3/ 30211/ 2019-1 நாள். 20.04.2021.

பொருள்: பொதுப்பணி - வணிகவரித்துறை - சென்னை (தெற்கு) கோட்டம் - மறைந்த அரசு ஊழியர் திரு. அ.ப. செந்தமிழ்செல்வன் என்பவரின் மகன் திரு. செ. சண்முகநாதன், இளநிலை உதவியாளர்-கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டது - பணி வரன்முறைபடுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை:
1. இணை ஆணையர் (மா.வ.), சென்னை (தெற்கு) கோட்டம் ந.க.164/2017/அ6, நாள் 21.08.2019 மற்றும் 23.12.2019.
2. கூடுதல் தலைமைச் செயலர்/வணிகவரி ஆணையர் அவர்களின் கடித எண். ஒய்-3/ 30211/2019, நாள் 26.02.2020.
3. அரசு கடித எண்.2403/அ2/2020-1, நாள் 24.03.2021.

*******

A6

சென்னை (தெற்கு) கோட்டம், உதவி ஆணையர் (மா.வ.), கோயம்பேடு வரிவிதிப்பு வட்ட அலுவலகத்தில், உதவியாளராகப் பணிபுரியும் போது, 10.11.2016 அன்று மறைந்த அரசு ஊழியர் திரு. அ.ப. செந்தமிழ்ச்செல்வன் என்பவரின் மகன் திரு. செ. சண்முகநாகதன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, துணை ஆணையர் (மா.வ.), சரகம்-11 அலுவலகத்தில் 19.07.2018 அன்று முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பணித்தரத்தில், வரன்முறை செய்யும் பொருட்டு, தனியரது கீழ்காணும் அனைத்து அசல் சான்றுகள்/ஆவணங்கள் ஆகியவை சரிபார்ப்பு பட்டியலுடன் ஒப்பு நோக்கி சரிபார்க்கப்பட்டது.

2. எனவே, திரு. செ. சண்முகநாதன், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் பணித்தரத்தில், அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 26.02.2021-ன்படி அவர் பணியில் சேர்ந்த நாளான 19.07.2018 அன்று முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.